# ஜெயங்கொண்டம் நகராட்சி.

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR No | SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| 18.11.2020 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18.11.2020 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>**தனி அலுவலர்**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி.** | |
| 18.11.2020 | 252 | **பொருள் : 01**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 26888 / UGSS -2/2018 நாள்- 12.11.2018 இன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு IUDM 2018 -2019 திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2 KLD கொள்ளளவுக் கொண்ட Fecal Sludge Treatment Oant (FSTP) அமைத்திட தெரிவிக்கப்பட்டு செந்துறை சாலை கலவை உரக்கிடங்கு பகுதியில் அமைந்துள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு மேற்படி பணிக்காக தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 250.00 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் மேற்கண்ட இடத்தில் நிரப்பட்ட டமண்ணின் (Madeup Soil) தன்மையின் அடிப்படையில் அடித்தளம்அமைக்கும் பட்சத்தில் மதிப்பீட்டு தொகையினை விட ரூ. 125.00 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதால், தற்போது மாற்று இடமாக பெரியவளையம் கிராம புல எண். 55 மற்றும் 82 – ல் 1.50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து தர வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படும் பட்சத்தில் பணி துவங்கப்படும். அதற்கான கசடுகழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு அனுமதி பெற நகராட்சி நிர்வக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும், அனுமதி பெற்றவுடன் நாளிதழ் மற்றும் அரசிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1207 / 2018 / இ1** | அனுமதிக்கப்பட்டது |
| 18.11.2020 | 253 | **பொருள் : 02**<br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF + சிறப்பு சான்று மற்றும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் குப்பையில்லா நகராட்சியாக (Garbage eree City) சான்று பெற பொது மக்களின் சுய உறுதி மொழி சான்று பெறவும் ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் பிரசுரம் செய்திட தோராய செலவினம் ரூ. 50,000/– க்கும் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2465 / 2020 / எச்1** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 18.11.2020 | 254 | **<u>பொருள் : 03</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் 21 வார்டு எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொது மக்கள் அதிகமாக கூடுமிடங்களான அனைத்து பஸ்டாப்களிலும் தூய்மை இந்தியா திட்டம், கொரோனா தொற்று பரவமா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<u>அலுவலக குறிப்பு :</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.1048 / 2014 / எச்1</u>** | அனுமதிக்கப்பட்டது |
| 18.11.2020 | 255 | **<u>பொருள் : 04</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் இரண்டு ஆண்டுகளில் நடைப்பெற்ற திட்டப்பணிகள் (2019 –2020 மற்றும் 2020–2021) தினதந்தி நாளிதழில் 25.10.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 18900/– வழங்கக் கோரி நாளிதழுடன் கேட்பு பட்டியல் வரப்பட்டுள்ளது. வரப்பட்டுள்ள பட்டியலுக்கான தொகை ரூ. 18900/– THE DAILY THANTHI அவர்களுக்கு வழங்கிடவும், அதற்கான செலவினத் தொகை ரூ. 18900/– (ரூபாய் பதினெட்டாயிரத்து தொளாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<u>அலுவலக குறிப்பு :</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 1084 / 2017 / எச்1</u>** | அனுமதிக்கப்பட்டது |
| 18.11.2020 | 256 | **<u>பொருள் : 05</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஆணையரின் தொலைபேசி எண். 7397389955 க்கு தொலைபேசி கட்டணம் செலுத்தப்படாமல் இருந்து வந்ததால் தொலைபேசி இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது. அதனை தொடர்ந்து தற்சமயம் புரெவி புயலின் காரமாக இந்நகராட்சியில் எடுக்கப்படும் பணிகள் விவரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவல் தெரிவிப்பது முக்கிய அவசர அவசியம் என்பதால் தொலைபேசி கட்டணம் கேட்பு ரூ. 7521/– உடனடியாக செலுத்த வேண்டியுள்ளதால் ரூ. 7521/– செலுத்திட மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>அவசரம் அவசியம் குறித்து தொலைபேசி கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண். 2234 / 2020 /சி1</u>** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 18.11.2020 | 257 | **<u>பொருள் : 06</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 10/2020 ம் மாதம் வரை மாவட்ட ஆட்சியர் அரியலூர் அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே இந்நகராட்சி துப்புரவு பணியை வெளிப்புற ஒப்பந்தம் (Out sourcing contract) மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட துரை & கோ என்ற நிறுவனத்தின் மூலம் பணியாளர்களை கொண்டு பணியை செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்புதல் அளித்த ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 11/2020 ம் மாதம் முதல் 01/2021 ம் மாதம் வரை தினக்கூலி ஊதியம் வழங்கிடவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>பொதுமக்கள் நலன் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 238 / 2018 /இ1</u>** | அனுமதிக்கப்பட்டது |
| 18.11.2020 | 258 | **<u>பொருள் : 07</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 10/2020 ம் மாதம் வரை தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே இந்நகராட்சி துப்புரவு பணியை வெளிப்புற ஒப்பந்தம் (Out sourcing contract) மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட துரை & கோ என்ற நிறுவனத்தின் மூலம் பணியாளர்களை கொண்டு பணியை செய்திட மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொதுமக்கள் நலன் கருதியும் ஏற்கனவே ஒப்புதல் அளித்த ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 11/2020 ம் மாதம் முதல் 01/2021 ம் மாதம் வரை மேற்கண்ட நிறுவனமே பணியாளர்களை கொண்டு தொடர்ந்து டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்றும் மன்றத்தின் அனுமதிக்கு<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>பொதுமக்கள் நலன் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 834 / 2016 /அ1</u>** | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>18.11.2020</td>
<td>259</td>
<td>
<u>பொருள் : 08</u>
ஜெயங்கொண்டம் நகராட்சியில் பொதுப்பிரிவு, பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் கணினி பிரிவுகளில் போதிய அளவு கணினி இல்லாமல் இருப்பதாலும் மற்றும் அனைத்து பிரிவிற்கும் ஒரு பிரிண்டர் கொண்டு பணிகள் செய்வதில் மிகவும் சிரமமாக உள்ள நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அரியலூர் அவர்களுக்கும் அறிக்கை அனுப்பி வைத்திட காலதாமதம் ஆகின்ற காரணத்தினாலும், மேலும் பணிகள் காலதாமாகின்ற நிலையில் பொது மக்களிடையே இந்நகராட்சியின் மீது அவப்பெயர் ஏற்படக் காரணமாக உள்ளதனை தவிர்த்திடும் பொருட்டு அனைத்து பிரிவினருக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கி வழங்குவதற்காக பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட 1920 பிரவு 15ன் ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுப்பணி உத்தரவு வழங்கி பணி நல்லமுறையில் முடிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>பணி மேற்கண்ட ஒப்பந்ததாரர்</th><th>பட்டியல் தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>HP ALL IN ONE COMPUTER NO -10</td><td rowspan="3">Suresh Systems,<br>23, Amman Sannathi,<br>Sankarankovil.</td><td rowspan="3">9,27,050/–</td></tr>
<tr><td>2</td><td>HP LASER JET1020 PLUS PRINTER NO.03</td></tr>
<tr><td>3</td><td>HP COLOUR LASER JET 155A PRINTER NO.02</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 2100 / 20 /சி1</u>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>